# நடப்பு நிகழ்வுகள்- ஜனவரி 21 - 2017

- தமிழக ஜல்லிக்கட்டு நடத்த வசதியாக இயற்றப்பட்ட அவசர சட்டத்திற்கு ஆளுநர் 21.01.17 ல் ஒப்புதல் வழங்கினார்.
- இந்திய தொலைத்தொடர்பு நிறுவனமான BSNL பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து பணமில்லா பரிவர்த்தனைக்கு "**மொபிகேஷ் எம் வாலட்**" எனும் புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளன.
- உள் நாட்டியே தயாரிக்கப்பட்ட இலகு ரக "தேஜாஸ்" போர் விமானம் முதல் முறையாக தில்லியில் வரும் 26 ஆம் தேதி நடைபெறும் குடியரசு தின விழாவில் வான் சாகசத்தில் ஈடுபட உள்ளது.
- Mission 41 K என்பது இந்திய ரயில்வேயினால் துவங்கப்பட்டுள்ள திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் ரூ41,000 கோடி மதிப்பிலான ஆற்றலை சேமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- ShaGun - என்பது அனைவருக்கும் கல்வி திட்டமான "**சர்வ் சிக்ஷ அபியான்**" திட்டத்தைப்பற்றிய விழிப்புணர்வை மேலும் அதிகரிக்கச் செய்ய மத்திய மனிதவளத் துறையினால் உருவாக்கப்பட்ட இணையதளமாகும்
- ஹிமாச்சல் பிரதேச மாநிலத்தின் இரண்டாவது தலைநகராக "**தர்மசலா**" தெரிவு செய்யப்பட்டுள்ளது.
- டில்லி சர்வதேச ஓபன் செஸ் போட்டி 2017 – ல் தஜிக்கிஸ்தான் (Tajikistan) நாட்டைச்சேர்ந்த **ஃபருக் அமோனாட்டோவ்** (Farukn Amonatou) வெற்றி பெற்றுள்ளார்.
- உத்திர பிரதேசம், பஞ்சாப், மணிப்பூர், கோவா ஆகிய மாநிலங்களில் பிப்ரவரி 4 முதல் மார்ச் 8 வரை சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது.
- கலப்பட உணவுப் பொருள், பானங்களைத் தயாரிப்போர் மற்றும் விற்போருக்கு **ஆயுள் தண்டனை** வழங்கும் வகையில் சட்டதிருத்தம் கொண்டுவர வேண்டும் என்று சட்ட ஆணையம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.
- அடுத்த நிதியாண்டு முதல் **(ஏப்ரல் -1 ம் தேதி) பிஹாரில்** எந்தவொரு மதுபான தொழிற்சாலைக்கும் உரிமம் வழங்கப்படமாட்டது. தற்போது உரிமம் பெற்று இயங்கி வரும்

தொழிற்சாலைகளும் 2017-18 ம் நிதியாண்டில் உரிமத்தைப் புதுப்பிக்க முடியாது என பிஹார் முதல்வர் நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

- நேபாளம், பூடான் , வங்கதேசம் , மியான்மர் உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் ரயில் போக்குவரத்து தொடர்பை உருவாக்குவது குறித்து மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- மேற்கு வங்க மாநிலம் , டார்ஜிலிங்கில் இந்திய ரயில்வே துறைக்கும் யுனைஸ்கோ அமைப்பிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 20.01.17- ல் கையெழுத்தானது.
- 43-வது தேசிய ஜீனியர் கைப்பந்து சாம்பியன் ஷிப் போட்டி கர்நாடக மாநிலத்தில் உள்ள சித்தரதுர்காவில் நடந்தது. இதில் பெண்கள் இறுதிப் போட்டியில் **தமிழக அணி அரியானாவை** வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.
- எஸ்.பி.ஐ யில் அரசு கூடுதல் மூலதனமாக ரூ7,575 கோடி செலுத்த முடிவு செய்தது. 75 சதவீததெகையான ரூ5,681 கோடி ஏற்கனவே வங்கிக்கு அளிக்கப்பட்டது. மீதி **ரூ1,894 கோடியை** தற்போது செலுத்த முடிவுசெய்யப்பட்டது.
- பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி உட்பட்ட நடப்பு நிதியாண்டில் பொதுத்துறையைச்சேர்ந்த 13 **வங்கிகளுக்கு** கூடுதல் மூலதனமாக **ரூ22,915** செலுத்த கடந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டது.